தமிழ்ப் பல்கலைக்கழகச்
# செய்தி மலர்
திருவள்ளுவராண்டு 2034 பிப்ரவரி 2003

## 2002 - முக்கிய நிகழ்வுகள்

தமிழ்ப் பல்கலைக்கழகம் இதுகாறும் ஏறத்தாழ 300 ஆய்வு நூல்களுக்கு மேல் வெளியிட்டுள்ளது. இலக்கியம், மொழியியல், சுவடியியல், அகராதியியல், சிற்பம், கட்டடக்கலை, தத்துவம், சித்த மருத்துவம், தமிழ்மொழி வரலாறு, பண்பாடு, இசை, நாடகம், நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்பியல் மற்றும் நில அறிவியல், மொழி சார்ந்த அறிவியல் ஆய்வுகள் எனப் பல்வேறு துறைகளில் இந்நூல்கள் அமைந்துள்ளன.

அனைத்துத் துறைகளிலும் எம்.ஃபில், பிஎச்.டி. ஆய்வு மாணவர்கள் பயின்று வருகின்றனர். இந்த ஆண்டில் சுவடிப்புலம், இலக்கியத்துறை, மொழியியல் துறை, சிற்பத்துறை, தத்துவமையம் ஆகியவற்றில் ஐந்து முதுகலை வகுப்புகள் தொடங்கப்பெற்றுள்ளன.

ஐந்து முதுகலை வகுப்புகளில் 126 மாணவர்களும், எம்.ஃபில். வகுப்பில் 113 மாணவர்களும், பிஎச்டி. வகுப்பில் 483 மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

ஐந்து புலங்களில் அமைந்துள்ள 23 துறைகளிலும் ஆய்வு தொடர்பான கருத்தரங்கங்கள், அறக் கட்டளைச் சொற்பொழிவுகள் இவ்வாண்டில் நிகழ்ந்துள்ளன. பல்கலைக்கழக நல்கைக்குழுவின் நிதி உதவியுடன் ஒவ்வொரு துறையிலும் ஆய்வுக் கருத்தரங்குகள் நிகழ்ந்துள்ளன. பல்கலைக்கழக நல்கைக்குழுவின் சார்பில் கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கான 9 புத்தொளிப் பயிற்சிவகுப்புகள் நடைபெற்றுள்ளன. கல்லூரிப் பேராசிரியர்கள் பலரும் இப்புத்தொளிப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு பயிற்சி பெற்றுள்ளனர்.

சிங்கப்பூர்த் தமிழ் ஆசிரியர்களுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்பு ஒன்றும் இந்திய மொழிகள் சார்பில் நிகழ்த்தப்பெற்றது. சிங்கப்பூர், மலேசியா, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருந்து சுமார் நாற்பது ஆசிரியர்கள் பங்கேற்று மொழி, பண்பாடு ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சிபெற்றனர். பிற மொழியினர்க்கும் பிறநாட்டவர்க்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடர்ந்து தமிழ்மொழி குறித்த பயிற்சியை நல்கி வருகின்றது.

இந்திய மொழிகள் பள்ளி சார்பில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அலுவலர்க்கான தமிழ்மொழி கற்பித்தல் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

பல்கலைக்கழகத்தின் வாயிலாக வெளியிடப்படுகின்ற அறிவியல் களஞ்சியங்கள், வாழ்வியல் களஞ்சியங்கள், அருஞ்சொல் அகர முதலி, பெருஞ் சொல்லகராதி வரிசைகள், கலைச்சொல்லாக்கத் தொகுதிகள், பிற துறை நூல்கள் ஆகியவை ஆய்வாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. இந்த ஆண்டு பதிப்புத்துறையின் வாயிலாக சுமார் 25 இலட்சம் மதிப்புள்ள நூல்கள் விற்பனையானமை குறிப்பிடத்தக்கது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் சார்பில் நிகழ்ந்த புத்தகக் கண்காட்சியில் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையைப் பாராட்டி நற்சான்றிதழ் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகப் புத்தக ஆண்டையொட்டிப் பதிப்புத்துறையின் சார்பில் நூற்காட்சியும் சிறப்பு விற்பனையும் மேற்கொள்ளப்பட்டன.

கொல்கத்தா தேசிய நூலகத்தின் நிதி உதவியோடு தமிழகப் பதிப்பாசிரியர்களுக்கான பயிலரங்கு ஒன்றும் நடத்தப்பெற்றது.

நில அறிவியல் துறையின் சார்பில் உலகமயமாதல் மற்றும் பேணத்தகு மேம்பாடு என்னும் பொருளில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும், பிரிட்டன், ஈரான் முதலிய அயல்நாடுகளிலிருந்தும் பேராளர்கள் கலந்து கொண்டனர்.

நடுவண் அரசின் நிதி உதவியோடு சித்த மருத்துவத் துறையின் சார்பில் சித்த மருத்துவம்: ஆய்வு நிறுவனங்களும், மருத்துவத் தொழிலகங்களும் என்னும் தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் நடைபெற்றது.

பல்கலைக்கழகத் துறைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் U.G.C., I.C.H.R., I.C.S.R., O.S.T.C., D.S.T., போன்ற நிறுவனங்களின் நிதிநல்கை ஒத்துழைப்போடு பல்வேறு ஆய்வுத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மாணவிகள் விடுதியின் விரிவாக்கக் கட்டடம், அறிவியல்துறை விரிவாக்கக் கட்டடம் ஆகியன ரூபாய் ஐம்பது இலட்ச மதிப்பில் கட்டி முடிக்கப்பெற்றுள்ளன.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட நிதி நல்கைத் திட்டத்தின் கீழ் மேலும் பல புதிய வாய்ப்புகள் பல்கலைக்கழகத்திற்குக் கிடைக்க உள்ளன.

இந்த ஆண்டில் ரூ.3,10,000/- மதிப்புள்ள அறக்கட்டளைகள் தமிழாய்விற்காக உருவாக்கப் பெற்றுள்ளன.

நடைபெற்ற மூன்றாம் பொதுப்பட்டமளிப்பு விழாவில் பல்வேறு துறைகளில் 39 பிஎச்.டி.,மாணவர்களும் 63 எம்.ஃபில்., மாணவர்களும் பட்டம் பெற்றனர்.

## தென்னாப்பிரிக்க ரெங்கசாமிபிள்ளை அறக்கட்டளை இசைப்போட்டி மற்றும் சொற்பொழிவு



தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறையின் சார்பில் மொழிப்புல அரங்கில் 30-01-2003 அன்று தென்னாப்பிரிக்க ரெங்கசாமி பிள்ளை அறக்கட்டளை இசைப்போட்டியும், அறக்கட்டளைச் சொற்பொழிவும் நடைபெற்றன.

இசைப்போட்டி காலை 11-00 மணிக்குத் தொடங்கியது. போட்டியில் தஞ்சை மாவட்டப் பள்ளி, கல்லூரி மாணவியர்கள் கலந்து கொண்டு தமிழ்ப் பாடல்கள் பாடினார்கள். இசைப்போட்டிக்கு நடுவர்களாக முனைவர் திருமதி இ.அங்கயற்கண்ணி, இசைத்துறைத் தலைவர், திருமதி இரா.மாதவி- ஆவணக் காப்பக உதவியாளர், இசைத்துறை மற்றும் தஞ்சாவூர் வீணை திரு இராமதாசு ஆகியோர் இருந்தனர்.

போட்டியில் முதல் பரிசினைப் பொன்னையா இராமஜெயம் கல்லூரி மாணவி செல்வி வெ.நா.அபர்ணா, இரண்டாம், மூன்றாம் பரிசுகளை நாட்டார் கல்லூரி மாணவிகளான செல்வி கவிதா, செல்வி பா.இராதா ஆகியோர் பெற்றனர்.

அறக்கட்டளைச் சொற்பொழிவு மாலை 3-30 மணிக்குத் தொடங்கியது. விழாவில் இசைத்துறைத் தலைவர் முனைவர் திருமதி இ.அங்கயற்கண்ணி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். முனைவர் திருமதி ஞானாம்பிகை குலேந்திரன் அவர்கள் தலைமையேற்றுப் பரிசு பெற்ற மாணவிகளுக்குப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கி வாழ்த்தி உரையாற்றினார்கள். முனைவர் எம்.பரிமளா குருமூர்த்தி, பேராசிரியர், இந்திய இசைத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை அவர்கள் அரிகதாகாலட்சேபம்-தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் இசையுடன் கூடிய சொற்பொழிவாற்றிச் சிறப்பித்தார்.

திருமதி இரா.மாதவி அவர்கள் நன்றி கூற, இசைத்துறை மாணவிகள் நாட்டுப்பண் இசைக்க விழா இனிதே நிறைவுற்றது.

## மூன்றாம் பொதுப் பட்டமளிப்பு விழா


தமிழ்ப் பல்கலைக்கழக மூன்றாம் பட்டமளிப்பு விழா 22-01-2003 புதன்கிழமை காலை 11-00 மணியளவில் தமிழ்ப் பல்கலைக்கழகக் கரிகாற்சோழன் அரங்கத்தில் சிறப்பாக நடந்தேறியது. மேதகு தமிழக ஆளுநரும், தமிழ்ப் பல்கலைக்கழக வேந்தருமாகிய திரு பெ.ஸ்ரீ.ராமமோகன் ராவ் பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமையேற்று 63 ஆய்வியல் நிறைஞர் மாணவர்களுக்கும் 39 முனைவர் பட்ட மாணவர்களுக்கும் பட்டங்களை வழங்கினார். இவ்விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழக இணைவேந்தரும், தமிழக அரசின் கல்வியமைச்சருமாகிய திரு செ.செம்மலை அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். சக்தி குழுமத்தின் தலைவர் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்கள் பட்டமளிப்பு உரை நிகழ்த்தினார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி பொதுப் பட்டமளிப்பு வரவேற்புரை நிகழ்த்தினார்கள். மூன்றாம் பட்டமளிப்பு விழா தமிழ்ப் பல்கலைக்கழக கரிகாற் சோழன் கலையரங்கில் சீரும்




சிறப்புமாக இவ்வகையில் நடைபெற்றமை இவ்வாண்டின் சிறப்பு நிகழ்வாகக் கருதப்படுகிறது.

-இரா.செ.ஜெயக்குமார்
பதிவாளர்(பொறுப்பு)

## திருநாட்டியத்தான்குடியில் புத்தர் சிலை கண்டுபிடிப்பு



திருவாரூர் மாவட்டம் திருநாட்டியத்தான்குடி எனும் தேவாரப்பாடல் பெற்ற பழைமையான ஊரில் ஒரு மூங்கில் காட்டில் அண்மையில் ஒரு புத்தர் சிலை முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியம், முனைவர் பா.ஜம்புலிங்கம், இந்து அறநிலையத்துறையின் செயல் அலுவலர் வி.கண்ணன் ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டது. சுமார் ஐந்து அடி உயரமுள்ள இந்த புத்தர் சிலை அமர்ந்த நிலையில் தியான கோலத்தில் காணப்படுகிறது. சோழநாட்டில் பௌத்தம் என்ற முனைவர் பட்ட ஆய்வுக்காக இவ்வாய்வாளரால் தொகுக்கப்பட்ட சுமார் 60 புத்தர் சிலைகளில் இதுவும் ஒன்றாகும். சோழநாட்டில் அமர்ந்த நிலையிலான புத்தர் சிலைகளே அதிகமான எண்ணிக்கையில் காணப்படுகின்றன. நின்ற நிலையிலான புத்தர் சிலைகள் மிகக்குறைவான அளவிலேயே உள்ளன. ஒருங்கிணைந்த தஞ்சாவூர், ஒருங்கிணைந்த திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களை உள்ளடக்கிய சோழ நாட்டில் காணப்படுகின்ற புத்தர் சிலைகளில் காணப்படும் கூறுகள் அனைத்தும் இச்சிலையில் உள்ளன.

இச்சிலையின் வலது கையும், கழுத்தும் உடைக்கப்பட்ட நிலையில் உள்ளது. கம்பீரத்தோற்றத்துடன் காணப்படும் இச்சிலை இப்பகுதியில் காணப்படுகின்ற பிற புத்தர் சிலைகளைப் போலவே உள்ளது. தலையில் தீச்சுடர் எனப்படுகின்ற உஷ்னிசா உடைந்த நிலையில் உள்ளது. முகம் அதிகம் சேதமுற்றுக் காணப்படுகிறது. உதட்டுப்பகுதி மட்டுமே ஓரளவு தெளிவாக உள்ளது. வழக்கமான மெல்லிய புன்னகையின் வெளிப்பாடு முகத்தில் காணப்படுகிறது. நீண்டு தொங்கிய காதுகளும், திண்ணிய தோள்களும், கம்பீரமான மார்பும் சிலைக்கு அழகைத்தருகின்றன. மார்பில் புரிநூல் காணப்படுகிறது. சோழ நாட்டில் காணப்படுகின்ற புத்தர் சிலைகளில் பெரும்பாலான சிலைகளில் காணப்படுவதுபோலவே இச்சிலையின் உள்ளங்கையில் சக்கரச்சின்னம் காணப்படுகிறது. இடுப்பில் ஆடை காணப்படுகிறது.

பெரும்பாலும் சோழநாட்டில் பாடல் பெற்ற தலங்களுக்கு அருகே புத்தர் சிலைகள் காணப்படுகின்றன. சைவ, வைணவ எதிர்ப்புக்கிடையே நெடுங்காலமாக பௌத்தமும் இங்கு பரவியிருந்ததை இதுபோன்ற சிலைகள் தெளிவுறுத்துகின்றன. இப்பகுதியில் உள்ள புத்தர் சிலைகளில் பல சிலைகள் இவ்வாறு உடைந்த நிலையில் உள்ளன. இவ்வாறான உடைந்த மற்றும் தலையில்லாத புத்தர் சிலைகள் பழையாறை சோழன்மாளிகை, அரியலூர் அருகே இராயம்புரம் போன்ற இடங்களில் இக்கட்டுரையாளரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதுபோன்ற மற்றொரு சிலை திருச்சி அருகே கீழக்குறிச்சியில் உள்ளது. இவ்வாறான சிலைகளை நோக்கும்போது பலத்த எதிர்ப்புக்கிடையே பௌத்தமானது இப்பகுதியில் ஒருகாலகட்டத்தில் நல்ல நிலையில் இருந்ததை உணரமுடிகிறது.

-முனைவர் பா.ஜம்புலிங்கம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## அறிவியல் தமிழ்

நான்காவது தமிழாக அறிவியல் தமிழை உருவாக்குதல் மற்றும் தமிழில் அறிவியல், மருத்துவம், பொறியியல் போன்ற நூல்களை வெளியிடும் பணியை தமிழ்ப் பல்கலைக்கழகம் சிறப்பாகச் செய்யும் எனத் தமிழக அரசு தீர்மானித்து இப்பணியைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு ஒப்படைத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ள செய்தி இங்கு மகிழ்வுடன் பதிவு செய்யப்படுகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகம், தமிழக அரசின் நிதியுதவியுடன் ஏற்கெனவே 11 கலைச்சொற்கள் மற்றும் கலைச்சொல் அகராதிகளையும், 7 பொறியியல் நூல்களையும், 2 மருத்துவ நூல்களையும் பதிப்பித்துள்ளது. இதுவரை தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை 49 தலைப்புகளில் அறிவியல், மருத்துவம், பொறியியல் ஆகிய தலைப்புகளில் பல அரிய நூல்களை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அறிவியல் தமிழின் வளர்ச்சிக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பங்களிப்பு தொடரும் வகையில் தற்பொழுது தமிழ்ப் பல்கலைக்கழகம் குழந்தை நலம்-தொகுதி 1,2 ஆகிய இரண்டு மருத்துவ நூல்களையும் உயிர் வேதியல் என்ற அறிவியல் நூலையும் வெளியிட்டுள்ளன. அறிவியல் தமிழைப் பரப்பும் வகையில் மேலும் பல அறிவியல் நூல்கள் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளன. இந்நூல்கள் விரைவில் வெளிவரும்.

இ.அ.ப. மட்டும்

நூலஞ்சல்

நிர்வாக. நிருவாக அலுவலர் அவர்கள்
சரஸ்வதி மஹால் நூலகம்
தஞ்சாவூர்.

# தமிழ்ப் பல்கலைக் கழகம்
## தஞ்சாவூர்

### அண்மை வெளியீடுகள் *(2002)*

1. பாரதி பற்றிய எதிர்கால ஆய்வு — ரூ.20-00
2. பாரதியின் கவித்துவம் — ரூ.20-00
3. இரும்புத்தொழில் கலைச்சொல்லகராதி — ரூ.55-00
4. சமூகவியல் மற்றும் மானிடவியல் கலைச்சொல் விளக்க அகராதி — ரூ.95-00
5. தொழில் கலைச்சொல் அகராதி — ரூ.80-00
6. மருத்துவக் கலைச்சொற்கள் — ரூ.80-00
7. அருங்கலைச்சொல் அகரமுதலி — ரூ.600-00
8. பெருஞ்சொல்லகராதி தொகுதி-4 — ரூ.250-00
9. அம்மன் வழிபாட்டுச் சடங்குகளில் நாடகக் கூறுகள் — ரூ.110-00
10. அறிவியல் களஞ்சியம் தொகுதி-12 — ரூ.500-00
11. அறிவியல் களஞ்சியம் தொகுதி-13 — ரூ.500-00
12. தம்மபதம் — ரூ.190-00
13. உடற்கூறு பகுதி 2 — ரூ.200-00
14. இயந்திரவியல் இயந்திரப்பொறியியல் கலைச்சொற்கள் — ரூ.75-00
15. மின்னியல் மற்றும் மின்னணுவியல் கலைச்சொற்கள் — ரூ.65-00
16. திருமந்திரத்திற்காணும் சைவசமயக் கலைச்சொல் விளக்கம் — ரூ.80-00
17. சைவ சித்தாந்த சாத்திர வரலாறு — ரூ.200-00
18. சட்ட இயல் (மறுபதிப்பு) — ரூ.100-00
19. வாழ்வியற் களஞ்சியம்-தொகுதி 3 (மறுபதிப்பு) — ரூ.700-00
20. வாழ்வியற் களஞ்சியம்-தொகுதி 4 (மறுபதிப்பு) — ரூ.700-00
21. தமிழில் பாவர்சபை நாடகங்கள் (மறுபதிப்பு) — ரூ.220-00
22. கவிராச மார்க்கம் (தமிழாக்கம்) (மறுபதிப்பு) — ரூ.100-00
23. தமிழ்நாட்டு மூலிகைகள் அறிவியல் ஆய்வு (மறுபதிப்பு) — ரூ.100-00
24. பக்தி இலக்கியத்தில் சமுதாயப் பார்வை (மறுபதிப்பு) — ரூ.200-00
25. பழந்தமிழகத்தில் இரும்புத்தொழில் (மறுபதிப்பு) — ரூ.120-00
26. உயிரியல் கலைச்சொல் விளக்க அகராதி (மறுபதிப்பு) — ரூ.90-00

"பண்பாய் இதனைப் பேணிக் காப்போர்
பொன்னடி இரண்டும் எம்தலை மேலன"
-முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம்

**வரவேற்கிறோம்**

**தமிழ்ப் பல்கலைக்கழகத்திலிருந்து புதிய பொலிவுடன் வெளிவரவிருக்கும் தமிழ்க்கலை, Tamil Civilization ஆகிய இதழ்களுக்கு ஆய்வுக் கட்டுரைகள், மதிப்புரைக்கு நூல்கள் வரவேற்கப்படுகின்றன. கட்டுரைகளையும் நூல்களையும் இரண்டு படிகள் இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 001 என்ற முகவரிக்கு அனுப்பியுதவ வேண்டுகிறோம்.**